# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.235 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 16 | நாள் | : | 27.11.2025 |
| பெயர் | : | கலை சந்தனமாரி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 27th day of November 2025.

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

திருநெல்வேலி மாநகர சைபர் கிரைம் குற்றப் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 28.07.2018 ம் தேதி இரவு 10.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்த மேல மரத்தோணியைச் சேர்ந்த மாரியப்பன் மனைவி முருகலட்சுமி என்பவருக்கான தகவலைப் பெற்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தவரிடம் அவர் அளித்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

29.07.2018 அதிகாலை 1 மணிக்கு நிலையம் திரும்பி புகாரின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.234/2018 பிரிவு 294(பி), 323, 307, 302, 506(2) இதச உ/இ. 4 TNPWH Act ன்கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். அசல் புகாரையும் , முதல் தகவலறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு விசாரணை நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.21 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

சாட்சி திருநெல்வேலி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திரு.இசக்கிமுத்து (Junior Assistant), Principal District and Sessions Court, Tirunelveli என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் உதவியாளர் திருமதி.ப்ரீத்தா அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.27 18:00:06 +0530